**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொன்னேரி.**

**அ.வ.எண். 30/2012**

இந்நீதிமன்றத்து கிரேடு – 3 பென்ஞ்ச் கிளார்க் திருமதி. தேவி அவர்களால் சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் 1873–ஆம் ஆண்டு 10–வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று **2026 – ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 27** – ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| **தேதி** | 27.02.2026 |
| **பெயர்** | **ராஜேந்திரன்** |
| **த/பெ** | **கிருஷ்ணன்** |
| **சாட்சி** | **PW1** |

**விசாரணை தொடங்கும் நேரம்– 3.50 பி.எம்.**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி –**

3. வழக்கு சொத்தின் விவரம் தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.2 ஆவணத்தில் பட்டா எண் என்ன உள்ளது என்றால் 279 என்று உள்ளது. வழக்க சொத்தானது பூர்வீக சொத்தா அல்லது என் தந்தையின் சம்பாத்தியத்தில் வாங்கிய சொத்தா என்றால் பூர்வீக சொத்து. என் வழக்குரையில் என் தந்தையின் சுயமான சொத்து என்று குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் சரியல்ல என் தாத்தா மூலமாக என் தந்தைக்கு கிடைக்கப்பெற்றது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் பட்டா எண்.279 ல் என் சகோதரர் முனுசாமியின் பெயரில் உள்ளது என்று கூறினால் சரியா என்றால் முனுசாமியின் பெயரில் பட்டா உள்ள விவரம் எனக்கு தெரியாது. இந்த வழக்கிற்காக நான் பொய் சொல்கிறேன் என்றும் 1987 ல் இருந்து என் சகோதரரான முனுசாமியின் பெயரில் தான் மேற்சொன்ன பட்டா இருந்து வருகிறது என்றால் சரியல்ல. இந்த வழக்கை தாக்கல் சமயத்தியலாவது மேற்சொன்ன பட்டா முனுசாமியின் பெயரில் தான் இருந்து வந்தது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு தாக்கல் செய்த பிறகு வில்லங்கம் போட்டு பார்த்தபிறகு தான் எனக்கு தெரியவந்தது.

4. அவ்வாறு தெரிந்த பிறகு பட்டா எண்.279 ரத்து செய்யக்கோரி ஏதேனும் முயற்சி மேற்கொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் என்ன என்றால் 10 செண்ட். காலிமனையா அல்லது கட்டிடம் உள்ளதா என்றால் காலி மனை. வழக்கு சொத்தை குறித்து எனக்க எந்த விவரம் தெரியாது என்றும் 1994 ல் இருந்து செல்லையா என்பவர் தான் அவர்

சொத்தினை வாங்கிய பிறகு அங்கும் கட்டிடம் கட்டி இருந்து வருகிறார் என்றால் முதலில் செல்லையா என்பவர் கூரை வீடு அமைத்து இருந்தார் அப்பொழுது நான் சென்று கேட்டபோது தற்காலிகமாக தான் அங்கு வீடு அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்கள் ஆனால் அவர் காலி செய்யாமல் இருந்தபோது சந்தேகம் வந்ததின் பெயரில் தான் நான் வில்லங்கம் போட்டு பார்த்தேன். தற்போது வழக்கு சொத்தில் எந்த வீடும் இல்லை. வழக்கு சொத்து எந்த தெருவில் உள்ளது என்றால் சிவன் கோவில் தெரு. என்னிடம் காண்பிக்கப்படும் மின்சார அட்டை வழக்கு சொத்திற்கானது என்றால் தெரியவில்லை. 1994 ல் இருந்து தாவா சொத்தில் பக்கா வீடு தான் இருந்து வருகிறது அதில் செல்லையா தான் வரிகளை செலுத்தி இருந்து வருகிறார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வீடு எதுவும் இல்லை.

5. முனுசாமி செல்லையா பெயருக்கு கிரைய பத்திரம் எழுதி வைத்த விவரம் எனக்கு எப்பொழுது தெரியவந்ததது என்றால் 2010-ல் தெரியவந்தது. வழக்கு சொத்து வாதிகளின் அனுபவத்தில் தான் இருந்து வருகிறது என்று என் வழக்குறையில் குறிப்பிட்டுள்ளது உண்மையான சங்கதியா என்றால் சரியல்ல. வாதிகள் தான் வழக்கு சொத்தில் இருந்து வருகிறோம். நான் நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பொறுத்து 1985 ல் ஒரு குடும்ப ஏற்பாடு நடந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எந்த ஒரு ஆவணமும் இல்லாமல் ஒருவரின் பெயரில் பட்டா வழங்கியிருக்க முடியாது என்றால் முதலில் என் தந்தையின் பெயரில் பட்டா எண்.222 இருந்து வந்தது அதன்பிறகு என் சகோதரனின் பெயரில் எப்படி மாற்றப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. சிட்டா மற்றும் அடங்கல் எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் 2011 ல் வாங்கப்பட்டது.

6. வா.சா.ஆ.1 மற்றும் 6 ஆவணங்களை தவிர என் தந்தை கிருஷ்ணனின் பெயரில் வழக்கு சொத்து இருந்ததற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல செய்யவில்லை. 1993 ல் இருந்து வழக்கு சொத்திற்கான வரிகளை செல்லையா தான் செலுத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை செய்யக்கோரி வழக்கு சொத்து சம்மந்தமாக என் அண்ணனிடம் எப்பொழு எல்லாம் கேட்டேன் என்றால் திருமணத்திற்கு முன்பும் கேட்டேன் அதன்பிறகும் கேட்டேன். வழக்கு சொத்தில் பங்கினை கோரும் போது என் தாயாரும் உயிருடன் இருந்தேன் என்றால் சரிதான். என் தாயாரும் உயிருடன் இருந்தபோது நான் எதற்காக என் அண்ணனிடம் மட்டும் சென்று கேட்டேன் என்றால் அந்த காலக்கட்டத்தில் என் அண்ணன் தான் குடும்பத்தை நிர்வகித்து வந்தார். என் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளது போல் வழக்கு சொத்து குறித்து யார் மோசடி செய்துள்ளார்கள் என்றால் செல்லையா தான் மோசடி செய்துள்ளார்கள். எங்களை கேட்காமல் 1993 ல் கிரையம் ஏற்பட்டது. என் அண்ணன் மற்றும் என் தாயார் எந்த மோசடியும் செய்யவில்லையா என்றால் அவர்களும் தான் எங்களை ஏமாற்றி உள்ளனர்.

7. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். பெரிதும் படிக்கவில்லை. தனியார் நிறுவனத்தில் எந்த நிலையில் இருக்கிறேன் என்றால் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் வேலை பாரத்து வருவதால், எனக்கு வில்லங்கம் போட்டு பார்க்க நன்றாக தெரியும் என்றும், எனக்கு எழுத படிக்க தெரியும் என்றும் நான் கூறியது போல் 2010 ல் அல்லாமல் அதற்கு முன்பாகவே மேற்சொன்ன கிரையம் குறித்து எனக்கு தெரியவந்துவிட்டது என்றால் சரியல்ல. சுமார் 12 வருடங்களுக்கு முன்பாக தான் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன். ஆரம்பகாலத்தில் இருந்து நான் ரியல் எஸ்டேட் செய்து வருகிறேன் என்றும் வழ்க்கிற்காக பொய் உரைக்கிறேன் என்றால் சரியல்ல. 1993 ல் ஏற்பட்ட கிரைய பத்திரத்திற்கு கால வரையரையை தாண்டி இவ்வழக்கை தாக்கல் செய்து இருந்தால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கின் சொத்து விவரத்தின் நான்கு எல்லைகள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்படவில்லை. வழக்கு சொத்து விவரத்தில் தச்சூர் கிராமம் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளதே தவிர அதன் விலாசமோ அல்லது கதவு எண்ணோ குறிப்பிடப்படவில்லை என்றால் வழக்கு சொத்து காலி மனை என்பதால் குறிப்பிடபடவில்லை. வழக்கு சொத்தின் மதிப்பீட்டை காண்பிக்க நீதிமன்றத்தில் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. வழக்கு சொத்திற்கு முறையான நீதிமன்ற கட்டணம் செலுத்தவில்லை என்றால் சரியல்ல.

8. வழக்கு தாக்கல் செய்யும் பொழுது சொத்து விவரத்தில் பழைய சர்வே எண் தான் குறிப்பிட்டுள்ளதே தவிர அது உட்பிரிவு ஆனப்பிறகு உள்ள புதிய சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2009–ல் கிரையம் ஏற்பட்ட பிறகு வழக்கு சொத்து அடமானம் வைக்கப்பட்டது என்று அதில் இருந்தால் அது சரியா தவறா என்றால் வில்லங்கம் போட்டு பார்த்தபிறகு தான் அடமானம் குறித்து தெரியவந்தது. வா.சா.ஆ.2 ஆவணத்தில் 2 ம் எண்ணில் சொத்து விவரம் என்ன காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியவில்லை. எனக்கு தமிழ் படிக்க தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு இருக்கையில் 1993 ல் கிரையம் ஆனது குறித்து 2010 ல் எனக்கு எப்படி தெரியவந்தது என்றால் என் குடும்பத்தினர் மூலம் தெரியவந்தது. மேற்சொன்ன விவரத்தை என் வழக்குறையிலேயோ என் பிரமாண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் உரைக்கிறேன் என்றால் சரியல்ல. நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்து வருவதால் கட்டயமாக எனக்கு படிக்கத்தெரியும் என்றால் நான் ரியல் எஸ்டேட் தொழில் செய்யவில்லை அந்த நிறுவனத்தில் தான் வேலை செய்து வருகிறேன். வா.சா.ஆ.1, 2 மற்றும் 6 ஆவணங்கள் இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த வழக்கு காலவரையரையை தாண்டி 18 – 19 வருடங்களுக்கு பிறகு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

9. நானும் முனுசாமியும் சுமூகமான உறவு முறையில் இருந்துவருகிறோமா என்றால் எங்களுக்குள் பேச்சு வார்த்தை இல்லை. நான் எனக்காக மட்டும் இவ்வழக்கில் சாட்சியம் அளிக்கிறேனா என்றால் பிற வாதிகளுக்காகவும் சாட்சியம் அளிக்கிறேன். என் சகோதரிகள் அனைவரும் நல்ல நிலையில் இருந்து வருகிறார்கள் அதனால் அவர்களுக்கு வழக்கு சொத்தை குறித்து அவர்களுக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை நான் எனக்காக மட்டும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

**விசாரணை முடியும் நேரம். 4.35.p.m.**